**Date** : 07.07.2026

**SC.No.** : 194/2024

**PW** : 2

**Name** : **அஜய்குமார் த.பெ.வேல்முருகன்**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

எனக்கும் எதிரி ஆனந்தக்குமாருக்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எதிரி ஆனந்தக்குமாருக்கும் முனியசாமிக்கும் ஏதேனும் முன்விரோத பிரச்சினை உள்ளதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி ஆனந்தக்குமாருக்கும் முனியசாமியை கத்தியால் குத்தியதாக கூறப்படுவதை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எதிரி ஆனந்தக்குமாருக்கும் என்னை கத்தியால் குத்தி காயப்படுத்தவில்லை என்றால் சரிதான். நான் இருசக்கரவாகனத்தில் வரும்போது நாங்கள் கீழே விழுந்து அதற்கு தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். அந்த காயங்களை தான் எனது முதல் விசாரணையில் அடையாளம் காட்டி சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். தற்போது குறுக்கு விசாரணையில் சொல்லிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள MP திருமண மண்டபத்தில் எப்போதும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். நான் இருசக்கரவாகனத்திலிருந்து கீழே விழும்போது MP திருமண மண்டபத்தில் வேலையாட்கள் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் யாவும் போலிசார் கேட்டுக்கொண்டதன்படி தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை**: இல்லை

/Sd./S. Mohana Ramya,

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**